# கண்ணிவெடி கவனம்

## வீடு தேடிவரும் விழிப்புணர்வு

எண்ணிலடங்காத இழப்புகளுக்கு ஆணிவேராக இருந்த 30 வருடகால யுத்தமானது இன்றும் மக்கள் அச்சத்துடன் வாழ்வதற்கான அடையாளங்களைஅவர்கள் மத்தியில் இட்டுச் சென்றுள்ளது. அந்த அடையாளங்களுக்கு முக்கிய சான்றாக கண்ணிவெடிகள் காணப்படுகின்றன.

யுத்தம் முடிவுற்ற பின்னர் மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறுவதற்கு கண்ணிவெடிகளும் யுத்த எச்சங்களும் சவாலாக இருந்து வருகின்றது. கடந்த காலங்களில் மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளில் நடைபெற்ற கண்ணிவெடி விபத்து சம்பவங்களும் இதற்கு சான்றாக அமைகின்றது. கடந்த வருடம் வடக்கில் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதை தொடர்ந்து அவ்வருடம் நடுப்பகுதியிலிருந்து கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் துரிதமாக்கப்பட்டுள்ளது. வடக்கிலுள்ள மீள்குடியேற்ற கிராமங்கள் சிலவற்றில் வசிக்கும் மக்கள் கண்ணிவெடிகளினால் தற்போதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்கள் சிலரின் கவனயீனம் மற்றும் அவர்களின் கண்ணிவெடி குறித்த விழிப்புணர்வு அற்ற தன்மை என்பனவவே கண்ணிவெடிகள் மற்றும் வெடிக்காத வெடி பொருட்களினால் ஏற்படும் பாதிப்புகளுக்கு காரணியாக அமைகின்றது. அத்துடன் மக்களின் கால்நடைகளும் கண்ணிவெடி விபத்துகளுக்கு இலக்காகின்றது. கால்நடைகள் கண்ணிவெடிகளின் பாதிப்புகளுக்கு அதிகமாக இலக்காகுவதாகவும் இதனால் காட்டிற்கு விறகு வெட்டச் செல்வதற்கும் கால்நடைகளைப் பிடிக்கச் செல்வதற்கும் அச்சமாக இருப்பதாக மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

மீள்குடியமர்த்தப்பட்டுள்ள இடங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ள போதிலும் அதனை அண்டிய இடங்களில் அவை அகற்றப்படாமல் இருக்கலாம் இவ்வாறான விடயங்கள் தொடர்பாக மீளக் குடியமர்த்தப்படும் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு அம்மக்களுக்கு கண்ணிவெடி மற்றும் வெடிக்காத வெடிப் பொருட்கள் தொடர்பிலான விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. **யுனிசெப்** நிறுவனத்தின் அனுசரணையுடன் செயற்படுத்தப்படும் இந்நிகழ்ச்சித் திட்டத்தை **இன்டர் நியூஸ்** முன்னெடுப்பதோடு **சர்வோதய,ஆர்.டி.எப்** மற்றும் **சி.டி.எப்,** ஆகிய நிறுவனங்கள் இதற்கு அனுசரணை வழங்கி வருகின்றது.

வடக்கில் மீள் குடியேற்றம் நடைபெற்றுவரும் முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா வடக்கு ஆகிய பகுதிகளில் இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இத்திட்டமானது கண்ணிவெடி மற்றும் வெடிக்காத வெடிப் பொருட்கள் தொடர்பில் விழிப்புணர்வு மற்றும் அதன் அபாயத்தை எடுத்துரைக்கும் வீதிநாடகம், பாட்டு,மாணவர்களுக்கான வரைதல் போட்டி, கண்ணிவெடி தொடர்பில் விஷேடமாக தயாரிக்கப்பட்டுள்ள கணினி விளையாட்டுக்கள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளதுடன், கண்ணி வெடி தொடர்பில் மக்கள் கேட்கும் கேள்விகளுக்கும் பதிலளிக்கப்படும். கடந்த காலங்களில் இன்டர் நியூஸ் நிறுவனமானது யுனிசெவ் அமைப்புடன் இணைந்து பல கண்ணிவெடி பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**இவை வெடிக்காமல் இருக்கின்ற யுத்த வெடிபொருட்களாகவோ அல்லது கண்ணிவெடிகளாகவோ இருக்கலாம். இவை குறித்து கவனமாக இருக்கவும்**













படஉதவி : unicef

### 2009-2010 ஏப்ரல் வரையிலான காலப்பகுதியில் கண்ணிவெடியால் பாதிக்கப்பட்டோர் விபரம்

| ஆண்டு | சம்பவங்களின் எண்ணிக்கை | பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2009 | 18 | 28 |
| 2010(ஜனவரி- ஜூன் 07 ஆம் திகதி மட்டும்) | 7 | 19 |

தகவல்: unicef

**சந்தேகத்திற்கிடமான பொருட்களைக் கண்டால் பின்வரும் நிறுவனம் ஒன்றிற்கு அறிவிப்போம்**

**வவுனியா மாவட்டம்**

UNICEF: 024 222 3485
CTF: 024 222 1127
DMAO: 024 222 4214
SLA: 011 306 1231
MAG: 024 3243451
Sarvatra: 024 492 0206
Horizon: 024 224 8150
FSD: 024 458 9059
DDG: 024 324 8214

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

The HALO Trust: 021 320 5339

## கண்ணிவெடிகளும், வெடிக்காத வெடி பொருட்களும்(UXO)எவ்வாறு செயல்படுகின்றன?

- **கண்ணிவெடிகளும் வெடிக்காத வெடிபொருட்களும் மெதுவாகத் தொட்டால் கூட வெடிக்கக்கூடியவையாகும். அவற்றில் சில அவற்றின் அருகில் ஒருவர் கடந்து சென்றால் கூட வெடிக்கும் அளவுக்குக் கூருணர்வுள்ளவை.**

- **பல்வேறு வகையான கண்ணிவெடிகள் பல்வேறு விதங்களில் இயக்கப்படுகின்றன. நேரடி அமுத்தம் மூலமாகவும் குறுந்தூரக் கடத்தி இணைப்புகள் (Tripwires) மூலமாகவும் வெடிக்கச்செய்யும் கருவிகள் (Detonators) மூலமாகவும் அல்லது இந்த முறைகளின் ஒருங்கிணைப்பு மூலமாகவும் கண்ணிவெடிகள் வெடிக்கச் செய்யப்படுகின்றன.**

- **குறிப்பிட்ட ஒரு கண்ணிவெடி இவற்றுள் எந்த முறை மூலம் வெடிக்கச் செய்யப்படலாம் என சரியாகக் கூறுதல் இயலாது. எனவே, ஒரு கண்ணிவெடியை, வெடிக்காத வெடி பொருளை அல்லது சந்தேகத்துக்கிடமான பொருளை ஒருபோதும் நெருங்கவோ, தொடவோ வேண்டாம்.**




எச்சரிக்கை அடையாளமிடப்பட்டுள்ள இடங்களுக்குள் செல்வதைத் தவிர்ப்போம்.



இப்பத்திரிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு - 14, கிராண்ட்பாஸ் வீதி, 185ஆம் இலக்கத்தில் 2010ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.